# முன்காலத்தில் கணக்குப்பிள்ளை ஓலப்பாளையம் வந்த வரலாறு.

முன்காலத்தில் இங்கிருந்து கிழக்கில் காவிரிப்பூம்பட்டிணம் என்று ஊரில் ஒரு அரசர் இருந்தார் அவருக்கும் அந்த ஊர் குடிபடைகளுக்கும் இடிது சண்டை இருந்தது. அந்த ஊரில் ஓலப்பாளையத்தில் இருக்கும் கணக்குப்பிள்ளை ஜாதியினர் ஒருவர் பள்ளிக்கூடம் வைத்து அந்த ஊர் ஆண்குழந்தைகள் ஐநூறு பேர்கள் அந்த பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அரசர் இந்த ஊர் ஜனங்களை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று ஒரு சதியோசனை செய்தார். அதன்படி ஒருநாள் அரசர் ஊர் ஜனங்களையும் பள்ளிக்கூட உபாத்தியாயர் குழந்தைகள் எல்லோரையும் அரண்மனைக்கு விருந்துக்கு அழைத்தார் குறிப்பிட்ட நாளில் எல்லோரும் அரண்மனைக்கு வந்ததும் அரசர் சமையம் பார்த்து அரண்மனையின் நான்கு கேட்டுகளையும் பூட்டித்தாளிட்டு விட்டு சேவகரை கூப்பிட்டு எல்லோரையும் வெட்டி எரியும்படி உத்தரவிட்டார். சேவகர் அப்படியே எல்லோரையும் பிடித்து வெட்டும்போது உபாத்தியாயர் பயந்து சமயம் பார்த்து ஒரு கதவைத்திறந்து 500 பையன்களையும் கூட்டிக்கொண்டு.

புறப்பட்டு பழையகோட்டை வந்து பட்டக்காரர்
வீட்டுக்குச் சென்றார். விஷயம் தெரிந்து பட்டக்
காரர் எல்லோருக்கும் சாப்பாடு போட்டு
அங்கு சிலநாள் இருந்தார்கள். இந்தப்
பிள்ளை உபாத்தியாயர் கூட்டி வந்த ஐந்தாறு
பையன்களும் செட்டியார் பையன்கள்.
பட்டக்காரர் ஐந்தாறு பையன்களுக்கும் கவுண்டர்
பெண்களை பிடித்து கல்யாணம் செய்து வைத்
தார்கள். செட்டியார் பையன்களுக்கு கவுண்டர்
வீட்டில் கல்யாணம் செய்ததால் இப்போது
அவர்களை கொங்கு செட்டியார் என்று
சொல்வார்கள். பிறகு அந்த உபாத்தியாயர்
பிள்ளையை கன்னபுரம் கிராமம் தேவம்பாளையத்
தில் கணக்கு பிள்ளையாக நியமித்தார்கள்.
அன்றிலிருந்து இன்று வரை இந்த பிள்ளை
ஜாதியினர் தேவம்பாளையத்தில் வாரிசு பிரகா
ரம் கணக்குப்பிள்ளையாக இருந்து வரு
கிறார்கள்.

முற்றும்.